

Vol.26 | No. 10 | October 2022

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்






PRIESTS' AND RELIGIOUS SANGAMAM AND CELEBRATION OF SACERDOTAL AND RELIGIOUS LIFE FIRST PROFESSION SILVER JUBILEE, PADANTHALUMOODU, 24/09/2022



MAJOR ARCHIEPISCOPAL CURIA MEMBERS VISIT TO THE DIOCESE, 23/09/2022



ST. VINCENT DE PAUL CHARITY WORK, PALUGAL (24.09.2022) AND MUKKOOTTUKAL (20/09/2022)



ST. VINCENT DE PAUL, CC - JUBILEE QUIZ, PADANTHALUMOODU, 04/09/2022

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 26 NO :10 OCTOBER 2022



# இறையருள்
# IRAIARUL

உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| ஆயர் - திருமுகம் | 09 |
| மறைமாவட்ட கூரியா செய்திகள் | 15 |
| மறைக்கல்வி | 16 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 17 |
| இல்வாழ்வு இயக்கம் | 19 |
| வின்செண்ட்-தே-பவுல் சபை | 21 |
| அருட்சகோதரர்களிடமிருந்து | 23 |
| மறைமாவட்ட செய்திகள் | 25 |
| மறைவட்ட செய்திகள் | 29 |
| வரவிருக்கும் நிகழ்வுகள் | 36 |
| தென்காசி மறைபரப்புதளம் | 37 |
| MONTHLY AGENDA – OCTOBER 2022 | 39 |

Editorial Board

Patron
**His Excellency**
**Mar George Rajendran SDB**

Chief Editor
**Fr. Joseph Santhosh**

Associate Editors
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Iyathurai**
**M.R.Merin Sujith**

Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:
**Jesin J Joseph**

Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/138/2022**

**30 September 2022**

**Dear Readers,**

Greetings and prayerful wishes Bishop's House, Thuckalay!

In this circular, I want to reflect with you on the nobility of our priesthood, which we have received generously from God. The idea of priesthood has its roots in the Old Testament and especially in the book of Exodus. Reading the book of Exodus, one can notice a disclosure that is being developed from a distant deity of an oppressed people in Egypt to an intimate relationship with the people of Israel on their way to the Promised Land. The book begins with God delivering the Israelites from oppression in Egypt. Deliverance leads to responsibility on the part of God's people. Geographically, the first part takes place in Egypt, while the second part begins and ends at Mount Sinai in the wilderness. The themes that the book deals with include deliverance, covenant and presence.

In all these themes, relationship with Yahweh is crucial and it requires obedience on the part of the people. In fact, God's instructions regarding the Decalogue cover both vertical and horizontal dimensions, involving correct attitudes and actions towards God and towards humanity. Every area of life must yield to the relationship of covenant with the Lord. Accordingly, family, social, individual, and corporate rights are presented in the book.

The book of Exodus is rich in theology. Various aspects of theology have their foundation in this book. Some these theological aspects concerning God that stands out in the book are name, power, holiness, faithfulness, salvation and presence.

The name of Yahweh stands out in the book. In his conversation with God, Moses had a feeling that the people are going to ask God's name. What is he to say to them? His question assumes more than a name, for the name would answer what this deity could do for Israel. God answers, "I am who I am" (3:14), a sentence that continues to baffle scholars. In the context, the name signifies that this deity will act on behalf of Israel. The God of Israel liberates from oppression. He redeems elects, establishes a relationship and fulfils his promises (6:6-8). Pharaoh, the Egyptians, Moses, and the people of Israel witness the quality of the name. For this reason, the name is not to be used in an empty way, according to the third commandment (20:7). When God passes by Moses on the mountain, the proclamation begins with a twofold repetition, "Yahweh, Yahweh" (34:6), and is followed by theological terms that explain God's character of glory or goodness, all part of the content of who this deity is. Yahweh is the name of Israel's God with full meaning for them.

The second aspect of theology is power of God. The book of Exodus exudes the power of Yahweh. In the ten plagues, Yahweh pits his power against the power of Pharaoh. Each plague shows God's control of this world. Moses participates as the messenger because he has witnessed some miracles to affirm God's call. Parting the Red Sea stands as a great example of God's power. The event not only saves Israel, but also destroys her enemies, the Egyptian army. In addition, God's providence for Israel shows his power. Water, manna, help in combat, and guidance display his abilities to provide for Israel's needs.

The third aspect of theology is holiness. Exodus 15:11 asks, "Who is like you, majestic in holiness?" At the burning bush, Moses is warned to take off his sandals because the area is "holy ground" (3:5). Moral quality exemplifies this deity. The commandments assume God's holiness. In light of who God is, Israel is to be "a holy nation" (19:6 ), obeying the commandments and ordinances.

The fourth aspect of theology is faithfulness. Exodus phrases God's faithfulness in terms of 'remembrance.' God remembered his covenant with the 'fathers,' Abraham, Isaac, and Jacob. To remember his promises means that he acts in the light of his remembrance. In

this case, he sends a deliverer (Moses) who will lead Israel to the land promised to the patriarchs.

In return to God's faithfulness, Israel is to be faithful to Yahweh. The first commandment states that they are to have no other gods. No idols or images are to replace God. After all, there are no other gods who can stand with God. Victory over the gods of Egypt confirms this viewpoint.

But unfortunately, Israel failed to be faithful to Yahweh and this led to God's judgment. Israel knows that Yahweh is to be feared, for they witnessed his work in Egypt and experienced his presence on the mountain. However, their memory appears brief. God's anger may be averted by intercession and repentance holds the possibility of aversion of God's wrath, although Pharaoh does not do so in a meaningful way. Failure to obey may lead to a sin offering, an act that satisfies God. Atonement by blood cleanses the priests and the people, satisfying God's wrath.

God holds Israel responsible for obeying his instructions. Psalms 78 and 106 recount what God did in the book of Exodus and how Israel knew the commandments, but failed to obey. Relationship demands that both sides act faithfully.

Then, there is the aspect of salvation. God acts to save Israel from their plight. Salvation has a tangible side, namely, deliverance from Egypt. God initiates his salvation by observing Israel's groanings. He then takes steps to realize change, first by choosing a deliverer and then by bringing out the children of Israel from Egypt.

Redemption leads to a permanent relationship with the deity who worked for Israel. Although the redemption could be limited to political and economic conditions, as liberation theologians argue, the account in Exodus includes and goes beyond these areas. The relationship with their benefactor will impact their whole existence. Covenant that indicates the relationship, demands total commitment from both parties, though God has already worked and will prove faithful in the future. Remembrance of the way God has worked takes place in the festivals, the Passover being the one that rehearses the

exodus events. The festivals say to Israel that the God who worked in the past will continue to work in the present and in the future.

Finally there is the aspect of presence. The revelation of God's presence develops from hiddenness to a permanent site of presence, the tabernacle. The narrator indicates that God lurks in the background in the first two chapters. In chapter 3 the Lord speaks with Moses, revealing himself and his plans. He even dialogues with Moses, showing that he speaks in ways humans understand.

As the book unfolds, God's presence takes tangible directions with specific instructions to Moses in Egypt and at the mountain. Israel witnesses God's presence in the storm at Mount Sinai. As the people draw nearer to the deity who has been working in their behalf, they fear for themselves and ask Moses to continue to intercede for them. It is as though they need distance from God; presence draws near, but the people cannot take it. God continues to speak through Moses, but Israel is held responsible for the words from their leader.

To demonstrate more clearly God's presence, the tabernacle is built. The presence of God rests in the midst of Israel in the tabernacle. It veils God's presence in a way that the people can handle. Yahweh meets with Moses there. The people understand the implications because of the specific symbolism of the sanctuary in the centre of the camp.

With Yahweh at their core, Moses as intermediary, and the people in covenant relationship, Israel may advance beyond the book of Exodus to experience the Lord's will. In order to perpetuate this relationship, as expressed in the various aspects of theology concerning God, we have the institution of the priesthood. The Scriptures understood priesthood as universal and ministerial.

When St Peter called the Christian faithful as "royal priesthood" (1 Pet. 2:9)echoing Exodus 19:6, where the Lord calls his chosen people, Israel, "a kingdom of priests and a holy nation." Peter is alluding to the universality of priesthood in continuity between the

Israel of God and the Christian Church.

St Paul identifies Christians as “the Israel of God” in Galatians 6:16. This is not to say that God has abandoned physical Israel but that covenantal relationship with the Father is determined by union with Christ and no longer merely by ethnic relationship with Abraham. This comparison between the Israel of God in the Old Covenant and the Israel of God in the New is the key for showing the reasonableness of the existence of a ministerial priesthood within the New Testament Church.

Even though in the Old Testament all the Israelites were considered priests, there existed a specific ministerial priesthood. For example, just a few verses after the Israelites are called a “kingdom of priests,” one discovers a distinct order of men who are considered priests apart from the people: “And also let the priests who come near to the Lord consecrate themselves, lest the Lord break out upon them” (Ex. 19:22).

In verse 24 we read: “And the Lord said to him: go down, and come up bringing Aaron with you; but do not let the priests and the people break through to come up to the Lord.” What priesthood might this be? It is the firstborn priesthood whose priestly office would be given over to the Levites in Exodus 32 after the golden calf incident. The Lord says to Moses, “Behold, I have taken the Levites from among the people of Israel instead of every firstborn that opens the womb among the people of Israel” (Num. 3:12). Clearly, we can surmise that the old covenant had two priesthoods: the universal and the ministerial.

We can also understand the reasonableness of ministerial priesthood by looking at the New Testament against the backdrop of the threefold structure of the priesthood after Israel became a nation under the leadership of Moses and Aaron. Aaron is constituted as the single high priest according to Exodus 30:30 - the top level. His sons Nadab, Abihu, Eleazar, and Ithamar minister with him as priests according to Exodus 28:21 - the middle level. Finally, as mentioned before, all the Israelites were universal priests according to Exodus 19:6 - the bottom level.

When we compare this structure to the New Testament, we can see clearly the top level, which is occupied by a single high priest, Jesus. Hebrews 3:1 reads, "Therefore, holy brethren, who share in a heavenly call, consider Jesus, the apostle and high priest of our confession."

Along with the top level, the bottom level is also explicitly revealed in 1 Peter 2:5, 9: "Like living stones be yourselves built into a spiritual house, to be a holy priesthood. . . . But you are a chosen race, a royal priesthood, a holy nation, God's own people."

When one puts these levels of priesthood in the New Covenant alongside the three levels in the Old, the only level missing is the middle - namely, those priests who minister with the high priest, Jesus. The Catholic Church identifies this level as the hierarchical priesthood, which consists of both the episcopate and the presbyterate.

Jesus established a ministerial priesthood when he gave the apostles priestly duties. In the biblical tradition there are certain actions that are constituted specifically as priestly actions. We know a priest by what a priest does. We find Jesus conferring priestly duties on the apostles, and we conclude that he is constituting them as priests. The most important priestly duties that Jesus enjoined the Apostles are the forgiveness of sins and the offering of sacrifice. In John 20:20-23, Jesus transfers to the apostles his power to forgive sins when he said: "If you forgive the sins of any, they are forgiven; if you retain the sins of any, they are retained." Similarly, Jesus gave the Apostles the priestly duty of offering sacrifice, particularly the sacrifice that he offered at the Last Supper, when he said: "Do this in remembrance of me" (Lk 22:19).

Thus, we can notice a divine plan for the building of a new covenant ministerial priesthood. He established the Church as the New Israel paralleling the priestly ranks of old. He invests his apostles with certain duties that, when compared with the Old Testament, prove to be priestly. Through the inspiration of the Holy Spirit, he leads them to recognize and exercise their priestly prerogatives. Such prerogatives are even transferred to other men outside the college of the twelve apostles. In light of this divine plan, we can say that Christ

willed for his Church to have a ministerial-hierarchical priesthood that is distinct from the common-universal priesthood.

The ministerial priesthood that we have received is a gift that God has generously lavished upon us over and above the universal priesthood which every Christian is entitled to. We have to be grateful to God for this precious gift. We also have a bounden duty to bring to fruition this gift by serving the people who are entrusted to our care. Otherwise, we will find wanting like that servant who hid his master's talent. May the annual retreat that we are making become an occasion for deeper reflection on the quality of our priesthood!

Dear Fathers, we are entering the month of October, which is dear to every Catholic. It is definitely a beautiful month in which we manifest our devotion to Mother Mary, in a special way, by praying the holy rosary. It is also a grace-filled time for receiving the showers of blessings from our heavenly Mother. Just like the blooming roses which beautify our gardens and refresh the air with their sweet fragrance, the presence of our blessed Mother beautifies our parish communities, removes every element of evil and spreads the fragrance of her maternal love, peace, serenity and harmony. Our Blessed Lord wants the heart of every priest to be a home of Mother Mary, where she is the mother, guide and help. Let us give her the rightful place and honour her with profound love and devotion especially on the feast of the Holy Rosary.

With my prayers and blessings,

Yours in Christ Jesus,

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

† George Rajendran SDB
Bishop of Thuckalay

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

## Circular letter No/GR/40/2022

### ஆயர் சுற்றுமடல்

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும்,**

**ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

### புனித வின்சென்ட் தே பவுல் சபைத்திருநாள்

**"ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்; ஏனெனில், விண்ணரசு அவர்களுக்கு உரியது"** (மத் 5:3) என்ற விவிலிய கூற்றுக்கு ஏற்ப 1581-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 24-ஆம் நாள் பிறந்து தனது 19-ஆவது வயதில் குருவானவராக அருட்பொழிவு செய்யப்பட்டு 1660 ஆம் ஆண்டு செப்டம்பர் 27-ஆம் நாள் இறைமடியில் தலை சாய்த்தவர் தான் அருட்தந்தை வின்சென்ட் தே பவுல். தனது குருத்துவ வாழ்வின் சுமார் 60 ஆண்டுகளுக்கும் மேலாக ஏழைகளின் நலனில் அக்கரை கொண்டு அவர்களின் மேம்பாட்டுக்காக செய்ய முடிந்த அனைத்தையும் செய்து முடித்தவர்.

**"அன்பு என்பது சொற்களில் வாழ்வதில்லை. அன்பைச் சொற்களில் விளக்கவும் முடியாது; செயல்களால் தான் விளக்கம் பெறுகிறது அன்பு"** என்கிறார் புனித அன்னை தெரசா. ஏழை எளிய மக்களில் இறைவனைக்கண்டு பிறரன்புக்கு சான்றாக வாழ்ந்தவர்களே குருவானவரான வின்சென்ட் தே பவுலும் இவரை பாதுகாவலராகக் கொண்டு பிறரன்புப் பணியாளர்களின் சபையை நிறுவிய அருளாளர் பிரடரிக் ஓசானாமும் ஆவர்.

இத்தாலியில் மிலன் நகரில் 1813 ஏப்ரல் திங்கள் 23 ல் பிறந்த ஓசானாம் தனது 20 -வது வயதில் சட்டக்கல்லூரி மாணவனாக இருக்கும்போது தனது பிறந்தநாளில் அதாவது; 1833-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23-ல் **'தருமசபை'** என்னும் பெயரில் ஒரு பிறரன்பு சபைக்கு

உருகொடுத்தார். 20 முதல் 22 வயதுடைய 6 இளைஞர்கள் மற்றும் சகோ. இம்மானுவேல் பெய்லி என்ற 40 வயதுடைய முதிர்ந்தவரின் வழிகாட்டுதலுடன் தோன்றிய இச்சபை, 1834-ஆம் ஆண்டு பிப்ரவரி 7 ஆம் நாள் **"புனித வின்சென்ட தே பவுல் சபை"** என்று பிறரன்பு பணியாளர்களின் பாதுகாவலரின் பெயரில் பெயர் மாற்றம் பெற்று இன்றளவும் மிகச்சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இன்று இச்சபை சுமார் 150-க்கும் மேற்பட்ட நாடுகளில் 47500 -க்கும் மேற்பட்ட கிளைச்சபைகளுடன் செயல்படுகிறது என்பதை எண்ணி பெருமை கொள்வோம்.

செப்டம்பர் 9 அருளாளர் பிரடெரிக் ஓசானாமின் திருநாளையும் செப்டம்பர் 27 இல் புனித வின்சென்ட் தே பவுல் திருநாளையும் கத்தோலிக்க திருச்சபை நினைவு கூறுகிறது. நாம் நமது மறைமாவட்டத்தில் இவ்விழாவை செப்டம்பர் 25 ம் தேதி மிகச்சிறப்பாக கொண்டாடுகிறோம். சுமார் 10 இலட்சத்திற்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்டு பொதுநிலையினரின் தலைமையில் செயல்படும் இவ்வுலகளாவிய பெரும் சபையில் உறுப்பினர்களாக இணைந்து செயல்படும் ஒவ்வொருவரையும் இச்சபையின் திருநாளிலே மனதாரப் பாராட்டி திருநாள் வாழ்த்துக்களையும் பதிவு செய்கிறேன்.

1963-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 8-ஆம் நாள் அருட்தந்தை **தாமஸ் வீட்டுவேலிக்குன்னேல்** அடிகளாரின் சீரிய முயற்சியால் சூசைபுரம் பங்கில் காலஞ்சென்ற சட்டமன்ற உறுப்பினர் திரு. கபிரியேல் நாடார் தலைமையில் குமரி மண்ணில் அதிகார பூர்வமான முதல் கிளைச்சபை உருகொண்டது. தக்கலை மறைமாவட்டம் உருவானபின் 12.12.1997-ல் **"தக்கலை மத்தியப் பேரவை"** உருவானதையும் நீங்கள் அறிவீர்கள். ஒவ்வொரு வருடமும் மத்தியசபை, வட்டாரசபை, கிளைச்சபை ஆகியவற்றின் வாயிலாக நீங்கள் செய்துவரும் பல்வேறு பிறரன்புப் பணிகளுக்காக உங்களை பாராட்டுகிறேன். அக்டோபர் 2-ம் நாள் நீங்கள் செய்துவரும் **'துப்புரவு முகாமை'** இவ்வாண்டும் தொடர்ந்து நடத்துவது நல்லது. அதுபோல, மத்திய பேரவை முன்னெடுத்துவரும் காருண்யா நிதி செயல்பாடுகள், கல்வி உதவித் தொகைகள், ஜீபிகடனுதவித் திட்டம், ஓசானாம் கல்வி நிலையத்தில் நடைபெறும் பயிற்சிகள், கிளைச்சபைகளில் நடைபெறும் ஏராளம் பிறரன்புப் பணிகள் போன்றவற்றை பாராட்டுவதோடு தொடர்ந்து அதன் செயல்பாடுகளை மெருகூட்டவும் நீங்கள் முயல வேண்டும். அதோடு,

புதிய உறுப்பினர்களை குறிப்பாக இளையோரை சபைப்பணிகளில் இணைப்பதில் உங்கள் கவனம் தேவைப்படும் காலகட்டமும் இது என எண்ணுகிறேன்.

மத்தியப்பேரவையின் வெள்ளிவிழாவை கொண்டாடும் இவ்வாண்டு, குறிப்பாக **"திருவிவிலிய ஒளிச்சுடர்"** அனைத்து பங்குகளிலும் செபத்தோடு வலம் வருவதை அறிந்து ஆன்மீக ஆலோசகரான அருட்தந்தையர்களையும் வின்செந்தியர்களையும் வெகுவாக பாராட்டுகிறேன். வெள்ளி விழாவை முன்னிட்டு ஒவ்வோர் மாதமும் ஒரு செயல்திட்டங்கள் தீட்டி நீங்கள் நடைமுறைப்படுத்தி வருகிறீர்கள். மேலும், இளையோர் கருத்தரங்கு, வின்செந்திய வினாடி-வினா போட்டிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதும் சிறப்புக்குரியது.

டிசம்பர் 11, 2022 அன்று வெள்ளிவிழாவின் கனவு திட்டமான ஆசாரிப்பள்ளம், நோயாளிகளின் பராமரிப்பு இல்லம் (VAAN) திட்ட கட்டட பணிகள் நிறைவுற்று திறப்பு விழா மற்றும் மத்திய பேரவையின் வெள்ளிவிழா நிறைவு கொண்டாடப்பட இருக்கிறது. அதற்காக மேற்கொள்ளப்படும் பொருளாதார முயற்சிகளிலும் அனைவரும் ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இன்றைய திருப்பலியின் காணிக்கையும் வின்செந்திய செயல்பாடுகளுக்கு வழங்கிட வேண்டும் என அருட்தந்தையர்களை கேட்டுக்கொள்கிறேன். இத்தருணத்தில் வின்செந்திய கையேட்டில் கூறப்பட்டுள்ளபடி; வின்செந்தியர்கள் கடவுளுக்கும், சபைக்கும், ஏழைகளுக்கும் விசுவாசமாக இருக்கவும் வின்செந்திய நற்பண்புகளான **எளிமை, இனிமை, உண்மை , உரிமை, கடமை, பொறுமை, நம்பகத்தன்மை** ஆகியவற்றை வாழ்விலும் வின்செந்திய பணிகளிலும் இணைத்துக் கொள்ளவும் நீங்கள் முன்வர வேண்டும்.

இவ்வெள்ளிவிழா ஆண்டில் தக்கலை மத்திய பேரவைக்காக கடந்த காலத்தில் உழைத்த அருட்தந்தையர்கள் மற்றும் பொதுநிலையினரின் சேவைகளை நினைவில் கொள்வோம். அனைவருக்கும் ஒருமுறைகூட திருநாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## செபமாலை மாதம்

அக்டோபர் மாதம் அன்னையின் ஆசி நிரம்பிட அவளை வேண்டி செபிக்கும் **செபமாலை மாதம்** என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆகவே, இந்த ஆண்டு அக்டோபர் மாதத்திலும் நாம் வழக்கமாகச் செய்கின்ற செபமாலை மற்றும் பக்தி முயற்சிகளை தொடர்ந்திட வேண்டும். அம்மாதத்தில் நாம் செபிக்கும் செபமாலை அனைத்தும் பெண் குழந்தைகளின் பாதுகாப்பிற்கும் எதிர்காலத்திற்காகவும் ஒப்புக் கொடுக்க வேண்டுகிறேன்.

இறைமகன் ஈசோ மெசியாவைத் தந்து மீட்பின் மாட்சிக்குச் சாட்சியான அன்னையும் ஈசோ மெசியாவின் முதல் சீடத்தியுமான அவளை தாய் திருச்சபையின் மிகச் சிறந்த புனிதராகக் கத்தோலிக்கர்களாகிய நாம் ஏற்றி, போற்றிப் புகழ்வது தனிச்சிறப்பு அல்லவா! **"அருள் மிகப் பெற்றவரே, வாழ்க"** (லூக்கா. 1:28) என வானதூதரும், **“உம்மைக் கருத்தாங்கி பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறு பெற்றவர்"** (லூக்கா. 11:27) எனக் கூட்டத்திலிருந்து குரல் எழுப்பிய பெண்ணும் தொடங்கி வைத்ததிலிருந்து இன்று வரை கத்தோலிக்க மக்களாகிய நாம் மரியாவை வாழ்த்தி வணங்கி வருகின்றோம்.

“இயேசு தம் தாயையும் அருகில் நின்ற தம் அன்புச் சீடரையும் கண்டு, தம் தாயிடம்”, **அம்மா, இவரே உம் மகன்**. பின்னர் தம் சீடரிடம், **“இவரே உம் தாய்”** என்றார். (யோவான். 19:2627) நாம் மரியாவை அன்புப் பெயர்களையும், அடைமொழிகளையும் சொல்லி அழைக்கின்றோம். அவை அனைத்திற்கும் மேலாக அவரைக் கூவியழைக்கும் அன்புச் சொல் “தாய்” என்பதேயாகும். அம்மா! தாயே! அன்னையே! என அவரை நாம் அழைப்பது மட்டுமின்றி, பிள்ளைக்கு உரிய பாசத்துடனும் நம்பிக்கையுடனும் அவரை அணுகி வேண்டி வருகின்றோம். நம் விண்ணப்பங்களை அவர் முன் வைக்கின்றோம்.

**“அவர்கள் (திருத்தூதர்கள்) அனைவரும் சில பெண்களோடும், இயேசுவின் சகோதரர்களோடும், அவருடைய தாய் மரியாவோடும் இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள்"** (தி.ப. 1:4) லூர்து மாநகர், பாத்திமா நகர், சலேத் நகர், கார்மேல் நகர், வேளாங்கண்ணி போன்ற நகரங்களில் காட்சி கொடுத்த நம் அன்னை மரியா செபத்தின் வல்லமையையும், செபமாலையின் ஆற்றலையும் அறிவிக்க செபமாலையுடன் காட்சி

தந்தார்கள். "செபம் இல்லாத வீடு, கூரை இல்லாத வீடு" இறைவனின் விருந்தில் இடம் பெற, அதுவே அருமருந்து என்பதை உணர்ந்து செபமாலை செபிப்போம். அன்னை கற்றுத்தந்த செபமாலை, நாம் பெற்றுக் கொண்ட புகழ் மாலை அல்லவா!

செபமாலை, அன்னை மரியாவுக்கு மிகவும் விருப்பமான செபம். எனவே, **'நம்பிக்கையுடன் நாள்தோறும் செபமாலை செபியுங்கள்'** என்றார் திருத்தந்தை 10-ஆம் பயஸ். திருத்தந்தை 10-ஆம் லியோ 1920-ஆம் ஆண்டு **அக்டோபர் மாதத்தை செபமாலை மாதமாக அறிவித்தார்**. 1995-ஆம் ஆண்டை திருத்தந்தை 2-ஆம் யோவான் பவுல் **செபமாலை ஆண்டாக** அறிவித்தார். செபமாலையின் இன்றியமையாமையைக் குறித்து திருத்தந்தை 5-ஆம் பவுல், செபமாலை 'அருட்கொடைகளின் கருவூலம்' என்றும், திருத்தந்தை 6-ஆம் பவுல் “செபமாலை சாத்தானை வெல்லும் சாட்டை" என்றும், திருத்தந்தை 9-ஆம் பயஸ் **'செபமாலை போல் அதிக அற்புதங்களை வேறெந்த பக்தி முயற்சியும் செய்யவில்லை'** என்றும், திருத்தந்தை 10-ஆம் பயஸ், **“செபங்களுள் மிகவும் அழகு வாய்ந்ததும், அருள் நிறைந்ததும் செபமாலையே! அன்னை கன்னித்தாய்க்கு மிகவும் விருப்பமான செபமும் அதுவே!** என்கிறார். 2002-ஆம் ஆண்டு திருத்தந்தை 2-ஆம் ன்பால் அவர்கள் இயேசுவின் பணிவாழ்வைச் சிந்திக்க புதிய ஐந்து மறையுண்மைகளையும் தந்துள்ளார்கள். அக்டோபர் மாதத்தை செபமாலையின் மாதமாக ஆண்டு தோறும் கொண்டாடி மகிழும் நாம், இவ்வாண்டு செபமாலையை பெண் குழந்தைகளின் நல்வாழ்வுக்காக செபிக்க கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, பெண் குழந்தைகளுக்கு எதிராக தொடுக்கப்படும் கொடுமைகளான, வன்புணர்வு, பாலியல் பலாத்காரம், பெண் குழந்தைகள் கடத்தல், பாலியல் தொழிலுக்குக் கட்டாயமாக்குதல், பெண் குழந்தைகளைக் கடத்திச் சென்று கை, கால்களை உடைத்து முடமாக்கி பிச்சை எடுக்க வைத்தல், குழந்தை திருமணம், கட்டாய கருகலைப்பு, கருமுட்டை விற்பனை போன்ற கலாச்சாரச் சீரழிவுகளால் இறைவனுக்கு எதிரான குற்றங்கள் பெருகி வருகின்றன என்பது நீங்கள் அறியாததல்ல. இப்பாவச் செயல்கள் அழிந்து போக நாம் செபிக்கும் செபமாலையின் கருத்துகளை இணைத்து செபிக்க வேண்டுகிறேன்.

இன்னொன்றை மிகவும் கவலையோடு உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். பெருகி வரும் போதை அடிமைப் பழக்கத்தால் இன்று இளைஞர்கள் சீரழிந்து வருகின்றனர். மாணவிகளும் இதற்கு விதிவிலக்கல்ல என்ற செய்திகளும் உள்ளத்தை உடைக்கிறது. ஏழை, பணக்காரர் என்ற அனைத்து நிலையினரும் இக்கொடிய தீய பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளனர். தீண்டாமை எப்படி சமூகப் பிரச்சினையாக உள்ளதோ, அதே போன்று போதைப் பழக்கமும் ஒரு சமூகப் பிரச்சினையாகவே மாறி வருகிறது.

இக்கொடிய பழக்கங்களால் மனச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இக்கொடிய தீமைகள் மாய்ந்து, நல்லதோர் சமுதாயம் மலர, நமது அக்டோபர் செபமாலை மாதத்தில் மனம் உருகி மன்றாடுவோம். அதோடு சிறப்பு செபமாலை, பக்தி முயற்சிகள் ஆலயத்திலும் எல்லா குடும்பங்களிலும் நடத்த உங்களை வேண்டுகின்றேன். **பெண் குழந்தைகளை, மையப்படுத்திய செபவழிபாடுகள், கருத்தரங்குகள், விழிப்புணர்வு வகுப்புகள்** நடத்துவது சாலசிறந்தது. அத்துடன் **அக்டோபர் 23-ஆம் நாள் ஞாயிறு பிற்பகல் 2.30 மணிக்கு** மறை மாவட்ட அளவில் **பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலய வளாகத்தில் தொடங்கி சூசைபுரம் மறைவட்ட புனித சூசையப்பர் ஆலயம் வரை** நடைபெறவுள்ள செபமாலைப் பவனியிலும் நம் மறைமாவட்ட மக்கள் அனைவரும் பங்கு மற்றும் உறவியங்கள் வாரியாகக் கலந்து அன்னையின் ஆசி பெறுவோம்! அன்னை வழி அருள் வரங்களை நிறைவாகப் பெறுவோம்! இறைவன் உங்களையும், உங்கள் குடும்பங்களையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

ஆயர் இல்லம்

03.09.2022

என்றும்

**மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**

தக்கலை மறைமாவட்ட ஆயர்

## மறைமாவட்ட கூரியா செய்திகள்

# *Transfer and Appointments*

| *Sl. NO* | *Name* | *Current Place* | *Transfer Effect from* | *Current and Additional Responsibilities* |
|---|---|---|---|---|
| *1* | Fr. Subin Scaria | Mukkoottukal | 01 October 2022 | Reappointed as Parish Priest of Holy Family Church, Mukkoottukal |
| *2* | Fr. Jogi Marangattu CMI | Minor Seminary, Mukkoottukal | 01 October 2022 | Procurator of St. Mary's Minor Seminary |
| *3* | Fr. Anil Raj | | 21 September 2022 | Assistant Director of Sinai Retreat Centre, Kalluvilai |
| *4* | Fr. Prince Maliyil | St. James Church, Mankarai | 10 October 2022 | Overseas Mission, Diocese of Limerick, Ireland |
| *5* | Fr. Jogesh Polachira | | 10 October 2022 | Parish Priest of St. James Church, Mankarai |




"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."
(மாற் 16:15)

***"நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகாய் இருக்கின்றன"***
***[உரோமையர் 10:15]***

அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்கள்!

ஊக்குவிப்பாளர்களின் கூட்டம்

2022 செப்டம்பர் 17 சனிக்கிழமையன்று பிற்பகல் 2.00 மணிக்கு கல்லுவிளை நற்செய்தி நிலைய அலுவலகத்தில் வைத்து இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் சேவியர் அவர்களின் தலைமையிலும் அருட்தந்தை ஜஸ்டின் செறுவேலில் அவர்களின் முன்னிலையிலும் செபத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து இயக்குநர்தந்தை அவர்கள் வகுப்பு நடத்த வந்திருக்கும் அருட்தந்தை ஜஸ்டின் செறுவேலில் அவர்களையும் மற்றும் புதிய ஊக்குவிப்பாளர்களாக பொறுப்பேற்றுள்ள அனைவரையும் வாழ்த்தி வரவேற்று உரை நிகழ்த்தினார். தொடர்ந்து அருட்தந்தை ஜஸ்டின் செறுவேலில் அவர்கள் ஊக்குவிப்பாளர்களுக்கு இருக்க வேண்டிய பண்புகள் பற்றியும் என்னென்ன அறிந்திருக்க வேண்டும் என்பது பற்றியும் மிகத் தெளிவாக வகுப்பு நடத்தினார். தொடர்ந்து இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் மற்றும் அருட்தந்தை ஜஸ்டின் செறுவேலில் அவர்களும் ஊக்குவிப்பாளர்களும் எரியும் மெழுகுவர்த்தி கையில் ஏந்தி மறைக்கல்விப் பணிக்கான உறுதி மொழி ஏற்றனர். தொடர்ந்து இயக்குநர் அவர்கள் ஊக்குவிப்பாளர்களுக்கு தேவையான அறிவுரைகள் வழங்கினார். இக்கூட்டத்தின் போது ஊக்குவிப்பாளர்கள் பார்வையிட வேண்டிய மறைக்கல்வி நிலையங்களின் பெயர் மதிப்பெண் போடவேண்டிய படிவங்கள் அனைத்தும் அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்டன. இக்கூட்டத்தின் போது அனைத்து ஊக்குவிப்பாளர்களும் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர். பின் இயக்குநர்தந்தை அவர்கள் மிகச்சிறப்பாக வகுப்பு நடத்திய அருட்தந்தை ஜஸ்டின் செறுவேலில் அவர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் நன்றி கூறினார். பின் செபத்துடன் கூட்டமானது 4.00 மணியளவில் இனிதே முடிவடைந்தது. அனைவருக்கும் தேனீர் வழங்கப்பட்டது.

**அருட்தந்தை. ஜேக்கப் ஐயம்மாத்ற**
**இணை இயக்குநர்**

**அருட்தந்தை.அபிலாஷ் சேவியர்**
**இயக்குநர்**

## சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM

### மறைமாவட்ட பொறுப்பாளர்கள் கூட்டம் மற்றும் பயிற்சி

சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் மறைமாவட்ட பொறுப்பாளர்கள் கூட்டம் செப்டம்பர் 17 சனிக்கிழமை மதியம் 2 மணிக்கு கல்லுவிளை SMYM அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மறைமாவட்ட பொறுப்பாளர்கள் மற்றும் தலைமைத்துவப் பயிற்சி முகாமில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் சிலர் கலந்து கொண்டனர். இதில் முக்கியமாக செப்டம்பர் 18 நடைபெறவுள்ள நிகழ்சிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

### படந்தாலுமூடு மறைவட்ட இளையோர் சந்திப்பு

சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் படந்தாலுமூடு மறைவட்ட இளையோர் சந்திப்பு நிகழ்ச்சி 2022 செப்டம்பர் மாதம் 18ஆம் தேதி ஞாயிற்றுகிழமை நடைபெற்றது. படந்தாலுமூடு மறைவட்ட ஆலய வளாகத்தில் மதியம் 1:30 மணிக்கு பெயர் பதிவுடன் ஆரம்பமானது. தொடர்ந்து 2 மணியளவில், படந்தாலுமூடு ஆலய இளையோர்கள் இறைவணக்கம் பாடினர். மறைமாவட்ட தலைவர் மெர்பின் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தொடர்ந்து படந்தாலுமூடு மறைவட்ட இயக்குனர் அருட்தந்தை சுமேஷ் அவர்கள் தொடக்கஉரையாற்றினார். மறைமாவட்ட இயக்குனர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் "இளையோர் மனதில் இயேசு" என்ற தலைப்பில் இளையோர்களின் விசுவாச வாழ்வை அடிப்படையாகக் கொண்டு வகுப்புகள் நடத்தினார். அதை தொடர்ந்து முஞ்சிறை பங்கைச் சார்ந் மனோஜ் அவர்கள் "இன்றைய சமூகத்தில் இளையோர்கள்"



என்ற தலைப்பில் மிகவும் கலகலப்பான முறையில் விவாதம் நடத்தினார். அதை தொடர்ந்து மறைமாவட்ட செயலாளர் மெரின் சுஜித் "தற்போதைய சமூகத்தில் வேலை வாய்ப்புகள்" என்ற தலைப்பில் வேலையின்மை பற்றியும் அதை மாற்றுவதற்கான வழிமுறைகள் குறித்தும், சமூகத்தில் உள்ள வேலைகளை எவ்வாறு கண்டுபிடிக்க முயற்சிக்க வேண்டும் என்பதை குறித்தும் வகுப்புகள்

நடத்தினார். பின்னர் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அனைவருக்கும் ஒவ்வொரு தலைப்புகள் வழங்கப்பட்டு அதை பற்றிய கலந்தாய்வுகளும் நடைபெற்றன. இடையிடையே நடந்த விளையாட்டுகள் மற்றும் சிறு நடனங்கள் வகுப்பு அனைத்து சிறந்த முறையில் நடைபெற வழிவகுத்தது. கடைசியில் பளுகல் ஆலய SMYM உறுப்பினர் ஆஷிக் அனைவருக்கும் நன்றி கூறினார். பின் இயக்க கீதத்துடன் நிகழ்சிகள் நிறைவடைந்தது. மறைமாவட்ட பொறுப்பாளர்கள் நிகழ்சிகளை சிறப்பாக ஒருங்கிணைத்தனர். இந்நிகழ்ச்சிக்காக ஏற்பாடுகளை படந்தாலுமூடு மறைவட்ட செயற்குழு உறுப்பினர்கள் சிறப்பாக செய்திருந்தனர். அதைபோன்று படந்தாலுமூடு மறைவட்ட ஆலய உதவி பங்குத்தந்தை அருட்தந்தை மகேஷ் அவர்கள் நிகழ்ச்சியின் உடன் இருந்து தேவையான உதவிகளைச் செய்தார்கள்.

***அலகு சந்திப்பு***


தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் தற்போது பங்குகளவில் நடைபெறும் அலகுகளை பார்வையிட்டு வருகின்றனர். ஞாயிற்றுகிழமைகளில் இளையோர்களுடன் இணைந்து திருப்பலியில் பங்கேற்று அலகு சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்று



வருகிறது. 11.09.2022 அன்று அண்ணிக்கரை மற்றும் பளுகல் ஆலயத்திலும், 11.09.2022 அன்று கழுவன்திட்டை மற்றும் தெற்றியோடு ஆலயத்திலும், 18.09.2022 அன்று அதங்கோடு, வளன்நகர் மற்றும் படந்தாலுமூடு ஆலயத்திலும் 25.09.2022 அன்று வயலின்கரை மற்றும் கிறிஸ்துராஜபுரம் ஆலயத்திலும் நடைபெற்றது. தற்போது நித்திரவிளை மற்றும் மஞ்சாலுமூடு ஆகிய மறைவட்டங்களில் அலகுசந்திப்பு நடைபெற்று வருகிறது.

இவண்
மெரின் சுஜித், செயலர்

# இல்வாழ்வு இயக்கம்



***இறைவா பிறரிடம் ஆறுதல் தேடுவதை விட, பிறருக்கு நான் ஆறுதல் தரவும். பிறர் என்னைப் புரிந்திடவேண்டுமென்பதைவிட, நான் பிறரைப் புரிந்து கொள்ளவும். பிறர் எனக்கு அன்பு செய்தல் வெண்டுமென்பதைவிட, பிறருக்கு நான் அன்பு செய்திடவும் உதவி செய்வீராக. ஏனெனில் தன்னலமறுப்பிலேதான் பொதுநலமும், மன்னிப்பிலேதான் பெருமன்னிப்பும், இறப்பிலேதான் மரணமில்லாப் பெருவாழ்வும் பெற முடியும்.***

***– அன்னை தெரசா***

***இல்வாழ்வு இயக்கம்***

உலகிற்கு ஒளியாய் வாழ்வுக்கு வழியாய் திகழுகின்றது திருக்குடும்பம். அத்திருக்குடும்பத்தை போன்று குடும்பங்களிலும் ஒற்றுமையான குடும்ப வாழ்வு அமைய வேண்டும் என்னும் நோக்குடனும், தாழ்நிலையில் இருந்த தம் அடியாரைத் தயையுடன் கடைக்கண் நோக்கினார் என்ற இறைவசனத்திற்கு இணங்க துன்பப்பட்டு வாழ்வதாரத்தை இழந்து தவிக்கின்ற குடும்ங்களுக்கு முன்னேற்ற பாதையில் கொண்டு செல்ல ஒரு வழிகாட்டியாகவும். குடும்பம் என்பது மரத்தின் கிளைகள் போன்றது . நாம் வெவ்வேறு திசைகளில் வளர்கிறோம். ஆனால் நமது வேர்கள் ஒன்றாகவே இருக்கும். இதைப்போன்று ஒற்றுமையான குடும்பத்தை உருவாக்க இவ்வியக்கம் குடும்பங்களுக்கு உறுதுணையாக செயல்பட்டு வருகிறது.

இவ்வியக்கத்தில் மனநல மற்றும் குடி நோயாளிகளுக்கான மருந்துகளும் வழங்கபட்டு வருகிறது. நோயாளிகளின் வசதிக்கேற்ப மாதத்தில் முதல் மற்றும் மூன்றாவது திங்கட்கிழமை மருத்துவர் றாபின் அவர்கள் வருகைப்புரிந்து மருத்துவ ஆலோசனைகளும் சிகிட்சையும் வழங்கிவருகிறார். மேலும் குடும்ப பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு ஆற்றுப்படுத்துதலும், அறிவுரையும் இயக்குநர்தந்தை மற்றும் அருட்கன்னியர்களால் வழங்கப்பட்டு வரப்படுகிறது.

இல்வாழ்வு இயக்கம் மற்றும் நல்வாழ்வு இயக்கம் சார்பாக இலவச இருதய மருத்துவ முகாம் மஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன்

SDB அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்கள். இதில் 250 க்கு மேற்பட்ட தாய்மார்கள் இலவச மருத்துவ பரிசோதனை செய்து கொண்டனர். இல்வாழ்வு இயக்கம் சார்பாக அருட்சகோதரி றோஸ் சிரியன்கண்டத் CHF அவர்களும் மாதர் இயக்கம் சார்பாக திருமதி ஜூலிட் அவர்களும் கலந்து கொண்டனர்.

***மாதர் ஜோதிஸ் இயக்கம்***

மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக கிராமிய நடன விழா மற்றும் உணவுத் திருவிழா அக்டோபர் 24 ம் தேதி காலை 10 மணியளவில் ஆசீர் ஆடிட்டோரியம் கல்லுவிளையில் வைத்து நடைபெறும். அனைவரையும் இவ்விழாவிற்கு வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

***திருமண ஆயத்தப் பயிற்சி***

திருமண ஆயத்தப் பயிற்சி வகுப்பானது செப்டம்பர் 2 மற்றும் 3 தேதிகளில் கல்லுவிளை இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இதில 12 பேர் கலந்துகொண்டனர். அடுத்த திருமண ஆயத்தப் பயிற்சி வகுப்பானது அக்டோபர் 7 மற்றும் 8 தேதிகளில் கல்லுவிளை, இல்வாழ்வு இயக்கத்தில் வைத்து நடைபெறவுள்ளது.

***அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்***

***இயக்குநர்***

---

## ***Annual Retreat for Priests***

from 9 - 14 October 2022 at Sangamam.

Preacher : Rev. Fr Daniel Poovannathil.




# வின்சென்ட்-தே-பவுல் சபை

### *வினாடி வினா தேர்வு*

தக்கலை மத்திய பேரவையின் வெள்ளி விழாவையொட்டிய மறைமாவட்ட அளவிலான "வின்செந்திய வினாடி வினாப் போட்டி" படந்தாலுமூடு திரு இருதய ஆலய வளாகத்தில் வைத்து 4.9.2022 அன்று மத்திய சபை தலைவர் சகோ. றாபி அவர்கள் தலைமையில், படந்தாலுமூடு வட்டார சபையின் ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்கள் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது.

### *"பரிசு குலுக்கல்" நிகழ்ச்சி*

தக்கலை மத்திய பேரவையின் வெள்ளி விழாவை ஒட்டிய "பரிசு குலுக்கல்" நிகழ்வு படந்தாலுமூடு திரு இருதய ஆலயவளாகத்தில் வைத்து



4.9.2022 அன்று மத்திய பேரவை தலைவர் சகோ. றாபி அவர்கள் தலைமையில் படந்தாலுமூடு வட்டார சபையின் ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை.தோமஸ் சத்தியநேசன் அவர்கள் முன்னிலையில் சிறப்புற நடைபெற்றது. குலுக்கலில் பரிசு பெற்றவர்களுக்கு பரிசும் கொடுக்கப்பட்டது.

### *திருவோணம் கொண்டாட்டம்*

புனித வின்சென்ட் தே பவுல் சபை, தக்கலை மத்திய பேரவையின் கீழ் சிறப்பாக செயல்பட்டு வரும் உத்திரங்கோடு ஓசானாம் கல்வி நிலையத்தில் 6-9-2022 அன்று ஓணம் பண்டிகை விமரிசையாக கொண்டாடப்பட்டது. மத்திய பேரவையின் சார்பில் தலைவர் சகோ.றாபி மற்றும் ஆறுகாணி வட்டார சபை

தலைவர் சகோ.எபி தோமஸ் கலந்துகொண்டு ஓசானாம் கல்வி நிலையத்தின் மாணவர்களோடும் ஆசிரியர்களோடும் இணைந்து மகிழ்ச்சியாக ஓணம் பண்டிகையை சிறப்பித்தனர்.

### *நலத்திட்டம் வழங்குதல்*

முக்கூட்டுக்கல் திருக்குடும்ப ஆலயத்தில் செயல்படும் கிளை சபையின் சார்பாக சிறுநீரக கேன்சர் நோயாளி திருமதி இராஜகுமாரி என்பவருக்கு ரூ 55000/- மருத்துவ செலவிற்கு பங்கு மக்களின் துணையோடு பிரிவு எடுக்கப்பட்டு 20.09.22 அன்று நோயாளிக்கு வழங்கப்பட்டது.

படந்தாலுமூடு வட்டார சபைக்குட்பட்ட பளுகல் புனித தோமையார் கிளை சபை சார்பாக 24.9.2022 அன்று புனித வின்செண்ட் தே பவுல் திருவிழா கொண்டாடப்பட்டது. நிகழ்வில் ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை ஜேக்கப் சக்கரியா கலந்து கொண்டு ஆன்மீக உரை நிகழ்த்தினார்கள். பின்னர் 10 தத்து குடும்பங்களுக்கு ரூபாய் 300 வீதம் கொடுக்கப்பட்டது. ஏழை திருமண நிதி உதவியாக 2 நபர்களுக்கு ரூபாய் 20000 வீதம் கொடுக்கப்பட்டது. வின்சென்டிய சகோதர சகோதரிகள் கலந்து கொண்டு விழாவை நன்முறையில் சிறப்பித்தார்கள்

### *வெள்ளி விழா நினைவு விவிலிய பவனி*

தக்கலை மத்திய சபையின் வெள்ளி விழாவையொட்டிய "திருவிவிலிய ஒளிச்சுடர்" ஆறுகாணி வட்டார சபையிலிருந்து 22.09.2022 முதல் களியல்



வட்டார சபைக்குட்பட்ட ஆலயங்களில் பவனியாக எடுத்து செல்லப்பட்டு செபம் செய்து வருகிறார்கள்.

தகவல் சேகரிப்பு
D. P. ஷாஜி
தகவல் தொடர்பு அலுவலர்

# அருட்சகோதரர்களிடமிருந்து

***"நம் எல்லாராலும் பெரியனவற்றை செய்ய இயலாமல் போகலாம், ஆனால் அனைவராலும் சிறியனவற்றை மிகுந்த அன்புடன் செய்யலாம்"***

***- புனித அன்னை தெரசா***

அனைத்து குருமடங்களிலும் செப்டம்பர் 5 ஆம் தேதி புனித அன்னை தெரசாவின் பெருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. அதைப்போன்று செப்டம்பர் 8 ஆம் தேதி புனித கன்னி மரியாவின் பிறந்த நாள் விழாவும் கொண்டாடப்பட்டது. அனைத்து குருமடங்களிலும் ஆடம்பர திருப்பலியும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இந்நிகழ்சிகளை தொடர்ந்து நடைப்பெற்ற ஒருநாள் சுற்றுலா பயணத்திலும் அருட்சகோதரர்கள் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டனர்.

மங்கலப்புழா, வடவாதூர், ஆலுவா, திருச்சூர் ஆகிய இடங்களில் பயின்று வரும் அருட்சகோதரர்களை நமது ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் சந்தித்தார்கள். ஆயரின் வருகை அருட்சகோதர்களுக்கு புது உற்சாகத்தையும், இறை அனுபவத்தையும் அளித்தது. அருட்சகோதர்களுக்காக ஆயர் அவர்கள் சிறப்புரையாற்றி ஜெபம் செய்தார்.

திருதொண்டர்கள் லிஜு, பிரின்ஸ் மற்றும் அஜின் ஆகியோர் தங்களின்



இறுதித் (comprehensive) தேர்வுகளை வெற்றிகரமாக நிறைவு செய்தனர். தற்போது அவர்கள் தங்கள் மேய்ப்புப்பணிக்கான படிப்பை தொடர்கின்றார்கள்.

ஒவ்வொரு குருமடங்களிலும் மிஷன் ஞாயிறு கொண்டாட்டம் மற்றும் ஏலம் நடத்தப்பட்டது. மிஷன் மற்றும் மிஷனரி பணிகளுக்கு சகோதரர்கள் தங்கள் பங்களிப்பை வழங்கினர்.



உஜ்ஜைன் ரூஹாலயா குருமடத்தில் communty day சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. திருச்சூர் மேரி மாதா குருமடத்தில் பயின்று வரும் திருதொண்டர்கள் மிஷன் அனுபவத்திற்காக உஜ்ஜயினுக்கு சென்றுள்ளனர்.

அனைத்து குருமடங்களிலும் தற்போது தேர்வுகள் நடைபெற்று கொண்டிருக்கின்றது. தேர்வில் வெற்றி பெற அனைவரும் எங்களுக்காக ஜெபிக்க கேட்டுக்கொள்கிறோம்.

சகோ. ஆண்டனி தகிடியேல்

| BIRTHDAY OF REV. FATHERS- OCTOBER - 2022 | |
|---|---|
| Fr. John Joseph | 17 |
| Fr. Augustine Thalodil | 27 |
| **FEASTDAYS OF REV. FATHERS - OCTOBER - 2022** | |
| Fr. Shoji Puthenpurackal | 09 |
| Fr. Stanley Chelliyil CMI | 14 |
| Fr. Luka Kollamparampil CMI | 18 |
| Fr. John Paul Puthuvalputhen | 22 |

# மறைமாவட்டச் செய்திகள்

## படந்தாலுமூடு பங்கில் ஹோம் மிஷன்

படந்தாலுமூடு திருஇருதய மறைவட்ட ஆலயத்தில் பாலா மகாணத்தை சார்ந்த SABS அருட்சகோதரிகள் சார்பாக ஹோம் மிஷன் நடைபெற்றது. சுமார் 6 அருட்சகோதரிகள் செப்டம்பர் 03 முதல் 08 தேதி வரை பங்கிலுள்ள அனைத்து வீடுகளையும் சந்தித்தனர்.

## புது ஆலய அர்ச்சிப்பு – கல்லுவிளை

கல்லுவிளை புனித அன்னை தெரசா அலயத்தின் அர்ச்சிப்பு விழா செப்டம்பர் மாதம் 04 தேதி நடைபெற்றது. ஆயர் அவர்கள் இந்நிகழ்சிகளுக்கு தலைமை வகித்து திருப்பலியை நிறைவேற்றினார். ஆலய கட்டுமான பணிகளையும் நிகழ்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய பங்குதந்தை அருட்தந்தை எபி பூவத்துமூட்டில் அவர்கள் சிறப்பான முறையில் செய்திருந்தார்

## பல்நோக்கு அரங்கு மந்திரிப்பு – மாங்கரை

மாங்கரை புனித ஜேம்ஸ் உயர்நிலைப்பள்ளியில் புதிதாக கட்டப்பட்ட பல்நோக்க அரங்க அர்ச்சிப்பு செப்டம்பர் 07 தேதி காலை 11:00 மணியளவில் மறைமாவட்ட ஆயர் அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து ஆசிரியர் கூட்டம் நடைபெற்றது. அனைத்து பள்ளிகளின் தாளாளர் அருட்தந்தை ஜாண்பால் இந்நிகழ்ச்சிகளுக்கு தலைமை தாங்கினார்.

## புதுப்பிக்கப்பட்ட குருசடி மந்திரிப்பு – களியல்

களியல் புனித மரியன்னை மறைவட்ட ஆலயத்தில் புதிதாக சீரமைக்கப்பட்ட குருசடியானது 07.09.2022 அன்று திருவிழா திருப்பலிக்கு பின் ஆயர் அவர்களால் அர்சிக்கப்பட்டது. ஆலய பங்குதந்தை அருட்தந்தை டினு CMI அவர்கள் அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பான முறையில் செய்திருந்தார்.

## புதுப்பிக்கப்பட்ட ஆலயம் அர்ச்சிப்பு குருசடி மந்திரிப்பு – வாறுதட்டு

வாறுதட்டு புனித சவேரியார் ஆலய பொன்விழாவை முன்னிட்டு, செப்டம்பர் மாதம் 10 தேதி மறைமாவட்ட ஆயர் மார் இராஜேந்திரன்

அவர்களால் மறுசீரமைக்கபட்ட ஆலயம் அர்ச்சிக்கப்பட்டு புதிதாக கட்டப்பட்ட குருசடி மந்திரிக்கப்பட்டது. அவர்களால் மந்திரிக்கப்பட்டு அர்ச்சிக்கப்பட்டது. மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துபறம்பில், பேரருட்தந்தை ஜோண்சிலால் அரக்கபறம்பில் மற்றும் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

### ஹோம் மிஷன் மற்றும் தியானம் – தென்காசி மறைதொண்டுதளம்

தக்கலை மகாணத்தை சார்ந்த CMC அருட்சகோதரிகளால் செப்டம்பர் மாதம் 13 முதல் 23 தேசதி வரை மேக்கரை, புதூர், தென்காசி, சுந்தரபாண்டியபுரம், ஆம்பூர் மற்றும் புளியறை ஆலயங்களிலும் தக்கலை மகாணத்தை சார்ந்த FCC அருட்சகோதரிகளால் ஆகஸ்ட் மாதம் 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில் வாஞ்சிநகர் ஆலயத்திலும் ஹோம் மிஷன் நடைபெற்றது. 28.09.2022 அன்று புளியறை ஆலயத்தில் தென்காசி மறைதொண்டுதளம் இறைமக்களுக்கான ஒருநாள் தியானம் நடைபெற்றது.

### SH கன்னியர் இல்ல மந்திரிப்பு – கம்பம்

காஞ்ஞிரப்பள்ளி மாகாணத்தின் SH அருட்சகோதரிகள், 14 செப்டம்பர் 2022 அன்று தேனி மாவட்டத்தில் உள்ள கம்பம் என்ற இடத்தில் ஒரு வாடகை வீட்டில் தங்கள் இறைப்பணியை தொடங்கியுள்ளனர். காஞ்ஞிரப்பள்ளி மாகாணத்தின் மாகாண தலைவி மேரி பிலிப் SH அவர்களின் முன்னிலையில், காஞ்சிரப்பள்ளி மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் வெள்ளமட்டம் இவ்வில்லத்தை மந்திரித்தார். அதைத்தொடர்ந்து பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல், பேரருட்தந்தை ஜோண்சிலால் அறக்கபறம்பில், ஆகியோர்களால் திருப்பலி நிறைவேற்றபட்டது. அருட்தந்தை பென்னி தட்டம்பறம்பில் நிகழ்வை ஒருங்கிணைத்திருந்தார்.

### பங்குத்தந்தை இல்லம் மந்திரிப்பு மற்றும் திருத்தொண்டுப் பணியாளர்கள் கூட்டம் – மேக்கரை

17 செப்டம்பர் 2022 அன்று மேக்கரை புனித ஜார்ஜியர் தேவாலயத்தில் புதிதாக கட்டப்பட்ட பங்குத்தந்தை இல்லம் மறைமாவட்ட ஆவணக்காப்பாளர் பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்களால் மந்திரிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து ஒரு மணி நேரம் ஆராதனை

நடைபெற்றது. ஆராதனைக்கு பின் திருத்தொண்டுப் பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றது. அனைத்து அருட்தந்தையர் மற்றும் அருட்சகோதரிகள் கலந்து கொண்டு தங்கள் பணி அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். தென்காசி மறைதொண்டுதளம் பணியின் வெள்ளிவிழாவை முன்னிட்டு தயாரிக்கப்பட்ட செயல் திட்டம் குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

## சமூகநலக்கூடம் மந்திரிப்பு – ஆரியூர், மதுரை

ஆரியூரில் SABS அருட்சகோதரிகள் நடத்தும் தையல் மற்றும் பயிற்சி மையத்துடன் புதிய சமூகநலக்கூடம் கட்டப்பட்டது. புதிதாக கட்டப்பட்ட புனித அல்போன்சா சமூகநலக்கூடம், 18 செப்டம்பர் 2022 அன்று, கூரியா உறுப்பினர்கள், மற்றும் தக்கலை மாகாணத்தின் SABS அருட்சகோதரிகள் முன்னிலையில் மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது. மதுரை மறைபரப்புத்தள பொறுப்பாளர் அருட்தந்தை ஜெபனேஷ் அவர்கள் அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பான முறையில் செய்திருந்தார்.

## புதுப்பிக்கபட்ட பள்ளிவளாகம் மந்திரிப்பு – ஆறுகாணி

ஆறுகாணி திருக்குடும்ப ஆரம்ப மற்றும் உயர்நிலைப் பள்ளிகளின் புதுப்பிக்கப்பட்ட பள்ளிக் கட்டிட மந்திரிப்பு 19 செப்டம்பர் 2022 அன்று பிற்பகல் 02.00 மணிக்கு தமிழ்வழிப் பள்ளிகளின் தாளாளர் அருட்தந்தை ஜாண் பால் அவர்களால் மந்திரிக்கப்பட்டது அதனைத்தொடர்ந்து ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றது. கட்டட பணிகளை ஆறுகாணி மறைவட்ட ஆலய பங்குதந்தை பேரருத்தந்தை. டோஜி பறம்பில்பறம்பில் அவர்கள் சிறப்பாக செய்திருந்தார்.

## காக்கநாடு உயர் மறைமாவட்ட கூரியா அருட்தந்தையர்கள் வருகை

நமது மறைமாவட்டத்தையும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள புனிதத் தலங்களையும் பார்வையிடுவதற்காக 2022 செப்டம்பர் 23 முதல் 25 வரை காக்கநாடு உயர் மறைமாவட்ட கூரியா அருட்தந்தையர்கள் வருகை தந்தனர். செப்டம்பர் 25, ஞாயிறு அன்று ஆனையடி புனித ஜார்ஜியர் தேவாலயத்தில் சிறப்பு திருப்பலி நடைபெற்றது.

### பல்நோக்கு அரங்கம் மந்திரிப்பு – தெற்றிவிளை

தெற்றிவிளை புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத்தில் புதிதாக அமைக்கபட்ட பல்நோக்கு அரங்கம் செப்டம்பர் மாதம் 25 அன்று மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்களால் மந்திரிக்கப்பட்டது.

### இலவச மருத்துவ முகாம் – மஞ்சாலுமூடு

நமது மறைமாவட்டத்தில் ‘உலக இதய தினம்’ கொண்டாடப்பட்டது. அதன் ஒரு பகுதியாக, 25 செப்டம்பர் 2022 அன்று காலை 09 மணி முதல் மதியம் 01.00 மணி வரை மாஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலய வளாகத்தில் இதய நோய்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி, கண்காட்சி, ரத்த தான முகாம் மற்றும் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. தக்கலை மறைமாவட்ட ஆயரும் TNBC சுகாதார ஆணையத்தின் தலைவருமாகிய ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்களால் இந்நிகழ்ச்சி துவக்கி வைக்கப்பட்டது.

### புனித அல்போன்சா கல்லூரி பட்டமளிப்பு விழா

சூசைபுரம் புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் ஐந்தாவது பட்டமளிப்பு விழா 26 செப்டம்பர் 2022 அன்று காலை 10.00 மணிக்கு கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. தக்கலை மறைமாவட்ட ஆயர் தலைமை தாங்கினார். திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகப் பதிவாளர் டாக்டர் ஜி.அண்ணாதுரை அவர்கள் மாணவர்களுக்கு இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டங்களை வழங்கினார்.

### விருதுநகர் மாவட்டத்தில் புதிய மறைதொண்டுதளம்

19 செப்டம்பர் 2022 அன்று விருதுநகர் மாவட்டத்தில் உள்ள இனாம் ரட்டியபட்டியில் முதல் முறையாக, ஜெபமாலை பவனி நடத்தப்பட்டது. இதில் குழந்தைகள், பெரியவர்கள் என 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். அருட்தந்தை பீட்டர் கிழக்கேயில் மற்றும் அருட்தந்தை ஆகாஷ் கீரஞ்சிரா இதற்காக முயற்சிகளை சிறப்பாக செய்திருந்தனர்.

# மறைவட்டச் செய்திகள்

## படந்தாலுமூடு

### திரு இருதய மறைவட்ட ஆலயம் – படந்தாலுமூடு

மாதாவின் பிறந்த நாளை முன்னிட்டு 1.9.2022 முதல் 8.9.2022 வரை மாலை 6 மணிக்குத் திருப்பலியும் அதைத் தொடர்ந்து செபமாலையும் செபிக்கப்பட்டது. மாதாவின் பிறந்த நாளான 8.9.2022 அன்று மாலை 6 மணிக்குத் திருப்பலியும் அதைத் தொடர்ந்து செபமாலை பவனியும் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து ஒவ்வொரு குடும்பங்களிலிருந்தும் கொண்டு வரப்பட்ட பலகாரங்கள் அனைவருக்கும் பகிர்ந்து வழங்கப்பட்டது.

3.9.2022 முதல் 8.9.2022 வரை ஹோம் மிஷன் நடைபெற்றது. பாலா SABS சபையைச் சார்ந்த 8 அருட்சகோதரிகள் பங்கிலுள்ள அனைத்து இல்லங்களையும் சந்தித்து மக்களுக்குத் தேவையான அனைத்து ஆன்மீக ஆலோசனைகளையும் வழங்கினார்கள்.

### புனித மரிய கொரற்றி ஆலயம் – அதங்கோடு

மாதாவின் பிறந்த நாளை முன்னிட்டு 8.9.2022 அன்று மாலை 6 மணிக்குத் திருப்பலியும் அதைத் தொடர்ந்து செபமாலையும் செபிக்கப்பட்டது.

### புனித சூசையப்பர் ஆலயம் – வளன்நகர்

மாதாவின் பிறவித் திருநாளை முன்னிட்டு 8.9.2022 அன்று மாலை 6 மணிக்குத் திருப்பலியும் அதைத் தொடர்ந்து செபமாலை பவனியும் நடைபெற்றது.

### புனித மார்ட்டின் டி போரஸ் ஆலயம் – கழுவந்திட்டை

மாதாவின் பிறந்த நாளை முன்னிட்டு செப்டம்பர் 1 முதல் 8ம் தேதி வரை மாலை 5.30 மணிக்கு செபமாலையும் அதைத் தொடர்ந்து திருப்பலியும் நடைபெற்றது. செப்டம்பர் 8ம் தேதி மாலை 5.30 மணிக்கு செபமாலையும் அதைத் தொடர்ந்து

ஆடம்பரத் திருப்பலியும் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் கொண்டு வரப்பட்ட பாயாசம் அனைவருக்கும் பகிர்ந்து கொடுத்து, மாதாவின் பிறந்த நாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

ஓணப்பண்டிகையை முன்னிட்டு உறவியங்களுக்கிடையேயான அத்தப்பூ போட்டி நடைபெற்றது. போட்டியில் நான்காவது உறவியத்தைச் சார்ந்த மக்கள் முதல் பரிசைப் பெற்றனர்.

11.9.2022 அன்று ஆலய இளையோர் இயக்கத்தை தக்கலை மறைமாவட்ட இளையோர் இயக்கத் தலைவர் பார்வையிட்டார்.

### புனித வின்சென்ட் தே பவுல் ஆலயம் – மார்த்தாண்டம்

27.9.2022 அன்று புனித வின்சென்ட் தே பவுல் திருநாள் கொண்டாடப்பட்டது. ஆலய பங்குதந்தை பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்கள் அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பான முறையில் செய்திருந்தார்.

## மஞ்சாலுமூடு

### திருச்சிலுவை ஆலயம் – மாலைக்கோடு

மாலைக்கோடு திருச்சிலுவை ஆலயத்தில் 11.09.2022 முதல் 19.09.2022 வரை திருவிழா ஆடம்பரமாக நடைபெற்றது. 11.09.2022 அன்று மாலை நவநாள் லதிஞ்ஞு தொடர்ந்து பங்குதந்தை ஜோஸ் வயலில் அவர்களால் திருக்கொடி ஏற்றப்பட்டது. தொடர்ந்து திருப்பலியின் இடையில் மாணவ மாணவிகள் முதல் திருவிருந்தை பெற்றுக்கொண்டனர்.

12.09.2022 முதல் 16.09.2022 வரையுள்ள நாட்களில் மாலை 5 மணி அளவில் நவநாள் லதிஞ் தொடர்ந்து ஆடம்பர திருப்பலி நடைபெற்றது 19.09.2022 அன்று மாலை 5 மணியளவில் நவநாள் லதிஞ் தொடர்ந்து ஆடம்பர திருப்பலி அதைத்தொடர்ந்து பலவிதமான மேளதாளத்துடன் ஆடம்பர தேர்பவனி நடைபெற்றது. 18.9.2022 அன்று ஆலய குடும்ப விழா காலை 10 மணியளவில் ராசா திருப்பலியுடன் தொடர்ந்து அன்பின் விருந்து நடைபெற்றது.

19.09.2022 திருவிழாவின் இறுதி நாள் அன்று இறந்தோருக்கான தினமாக கொண்டாடப்பட்டது. அன்று நவநாள் லதிஞ் இறந்தோருக்கான சிறப்பு திருப்பலி இறந்தோருக்கான வழிபாடு ஜெபங்கள் நடைபெற்றன. தொடர்ந்து பங்குதந்தை அவர்களால் திருக்கொடி இறக்கப்பட்டது. பின் நாகர்கோவில் தரங்க மியூசிக் ஈவண்ட் குழுவினரின் இன்னிசை விருந்துடன் ஆலய திருவிழா இனிதே நிறைவு பெற்றது

## தக்கலை–பிலாங்காலை

### தூய மிக்கேல் அதிதூதர் ஆலயம் – வெள்ளாம்பி



புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் வெள்ளாம்பி மலையில் தூய மிக்கேல் அதிதூதரின் திருவிழா பங்குதந்தை அருட்தந்தை வினு D ஜோசப் தலைமையில் சீரும் சிறப்புமாக செப்டம்பர் 25 ல் நடைபெற்றது. நீதிபுரம் பங்கு தந்தை அருட்தந்தை சூரியன் கோயில்புறம் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி மறையுரையும் வழங்கினார்கள். தொடர்ந்து சீரோ மலபார் திருச்சபையின் மறைப்பரப்பு பணியின் நட்சத்திரமாகிய திரு மரியதாஸ் ஆசிரியர் அவர்கள் தலைமையேற்று மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளை சிறப்பித்தார்கள்.

### புனித ஜார்ஜியர் ஆலயம் – ஆனையடி

செப்டம்பர் மாதம் 25 ஆம் தேதி காக்கநாடு உயர் மறைமாவட்ட தலைமையகத்தில் பணிபுரிகின்ற அருட்தந்தையர்கள் ஆனையடி புனித ஜார்ஜியார் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றினார்கள்

### புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலயம் – பிலாங்காலை

செப்டம்பர் மாதம் 30 ம் தேதி முதல் பங்கின் திருவிழா 10 நாட்கள்

மற்றும் ஆலயத்தின் பொன்விழா கொண்டாட தீர்மானிக்கப்பட்டது. அதற்காக வாழ்த்துக்களையும் ஆசீர்வாதங்களையும் நம் திருத்தந்தை அவர்கள் வழங்கினார்கள். பாப்புலர் மிஷன் தியானம் செப்டம்பர் 2 ம் தேதி நிறைவடைந்தது. நிறைவு நாளன்று குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துபறம்பில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

## களியல்

- **புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு.**

புனித கன்னிமரியாவின் பிறப்பு திருவிழாவையொட்டி செப்டம்பர் 01 முதல் 09 வரை தினமும் மாலை 6 மணிக்கு திருப்பலி நவநாள் மற்றும் ஜெபமாலை நடைபெற்றது. கடைசி நாளாகிய செப்டம்பர் 09 அன்று மாலை 6 மணிக்கு திருப்பலியும் அதைத்தொடர்ந்து நவநாள் மற்றும் ஆடம்பர ஜெபமாலை பவனியும் நடைபெற்றது. முடிவில் அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டது.

## சூசைபுரம்

- **கிறிஸ்து அரசர் ஆலயம் – பாலப்பள்ளம்**

செப்டம்பர் 1 முதல் 8 ஆம் தேதி வரை மாதாவின் பிறப்பை ஒட்டிய எட்டு நோன்பு பங்கில் சிறப்பாக கடைபிடிக்கப்பட்டது. ஆலய கெபியிலும் கல்லறை தோட்ட குருசடியிலும் தினமும் மாலை 5;30 மணிக்கு சிறப்பு ஜெபமாலை நடைபெற்றது. இதனை மரியாயின் சேனை உறுப்பினர்கள் முன்னின்று வழி நடத்தினார்கள். பங்கில் பாப்புலர் மிஷன் தியானம் நடத்த முன் தயாரிப்பு கூடுகை செப்டம்பர் 3 ஆம் தேதி இயக்குனர் அருட்தந்தை எட்வர்ட் மற்றும் இணை இயக்குனர் அருட்தந்தை லிஜோ ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

செப்டம்பர் 8 ஆம் தேதி ஓணப் பண்டிகை கொண்டாடப்பட்டது. காலை 7 மணிக்கு திருப்பலி, தொடர்ந்து இளையோர் மற்றும் பெரியோருக்கான கலை மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. இறுதியில் பரிசுகள் வழங்கப்பட்டது.

11 ஆம் தேதி முப்பெரும் விழா பங்கில் கொண்டாடப்பட்டது. மாதாவின் பிறப்பு திருநாள், ஆசிரியர் தின விழா அருட்சகோதரி

எலிசபெத் SABS அவர்களின் பிறந்தநாள் விழா ஆகியவை கொண்டாடப்பட்டது.
மாதாவின் பிறப்பு திருநாளை ஒட்டி சிறப்பு வினாடிவினாப் போட்டி நடைபெற்றது. விவிலியத்தில் மாதாவை குறித்த தகவல்கள் அடங்கிய பகுதியில் இருந்து வினாக்கள் கேட்கப்பட்டது.
செப்டம்பர் 11 மற்றும் 18 இல் சிறப்பு பங்கு பேரவை கூட்டமானது நடைபெற்றது.
17 ஆம் தேதி மறைவட்ட இறைமக்கள் பங்கெடுத்த "வந்து பாருங்கள்" தியானம் பங்கில் வைத்து நடைபெற்றது.

***பாப்புலர் மிஷன்.***

பாப்புலர் மிஷன் தியான தொடக்க நிகழ்வாக இயக்குனர் தந்தையர் முன்னிலையில் பங்குதந்தை அருட்தந்தை ஜான்பால் அவர்கள் கொடியேற்றினார்கள். தியான பொறுப்பாளர்களான திரு எட்வின்சன் மற்றும் திருமதி கஸ்தூரி ஆகியோர் கொடியை ஏந்தி பவனியாக கொண்டு வந்தனர்.
அன்றைய தினம் புனித வின்சென்ட் தே பவுல் சபையின் பாதுகாவலர் தினம் பங்கில் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. உறுப்பினர்கள் பக்தியுடன் காணிக்கைப் பவனி மற்றும் உறுதிமொழி ஏற்பில் பங்கேற்றனர்.

## ▶ புனித வியாகப்பர் ஆலயம் – மாங்கரை

01.09.2022 மாதாவின் பிறப்பு திருவிழாவை முன்னிட்டு தினமும் மாலை 05.45 மணிக்கு குருசடியில் ஜெபமாலை நடத்தப்பட்டன. 02.09.2022 அன்று பங்குதந்தை அருட்தந்தை பிரின்ஸ் தலைமையில் மாலை 05.30 மணிக்கு திருப்பலியும் அதைத் தொடர்ந்து திவ்ய நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது 08.09.2022 மாதாவின் பிறந்த நாள் மற்றும் ஓணப்பண்டிகையை முன்னிட்டு இளையோர்கள் சார்பாக காலை 09:00 மணிக்கு ஆலய வளாகத்தில் வைத்து மறைக்கல்வி மாணவர்கள் இளையோர்கள் பங்கு மக்கள் ஆகியோருக்கு தனித்தனியாக போட்டிகள் நடத்தி மாலைத் திருப்பலி முடிந்தவுடன் பரிசுகள் வழங்கப்பட்டன. மாலை 5.30 மணிக்கு ஆலய பங்குதந்தை தலைமையில் ஆடம்பர திருப்பலியும்,

ஜெபமாலை பவனியும் நடைபெற்றன. 11.9.2022 கூட்டவிளை உறவிய ஆண்டுவிழா பங்குத்தந்தை தலைமையில் ஜெபமாலையுடன் ஆரம்பமானது. அனைவரின் சார்பாக கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. விழா மிகசிறப்பான முறையில் நடைபெற்றது.

## நித்திரவிளை

### ▶ புனித அமலமரியா ஆலயம் சீனிவிளை

செப்டம்பர் 6-ஆம் தேதி முதல் 11ஆம் தேதி முடிய ஆறு நாட்கள் அன்னையின் திருவிழா கொண்டாடப்பட்டது. திருவிழாவுக்கு ஆயத்தமாக பங்கில் உள்ள எல்லா வீடுகளும் சந்தித்து ஜெபித்து மந்திரிக்கப்பட்டது. 6 ம் தேதி மாலை 6:00 மணிக்கு திருக்கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமானது 11 ஆம் தேதி இராசா திருப்பலி தொடர்ந்து திருகொடியிறக்குதல் மற்றும் அன்பின் விருந்து போன்ற நிகழ்வுகள் நடைபெற்றது. இத்திருவிழா நாட்களில் ஜெபமாலை, அன்னையின் நவநாள் வழிபாடு மற்றும் திருப்பலி ஆகியவை நடைபெற்றது. நற்செய்திப் பெருவிழா மற்றும் ஒப்புரவு வழிபாடும் நடைபெற்றது. ஏராளமான மக்கள் ஒப்புரவு வழிபாட்டில் கலந்துகொண்டு தங்கள் வாழ்வைப் புதுப்பித்துக் கொண்டனர். 5ம் நாள் ஆடம்பரமான அன்னையின் தேர்ப் பவனி நடைபெற்றது எல்லா மக்களும் திருப்பலி மற்றும் ஜெப வழிபாடுகளில் மிகுந்த பக்தியுடன் பங்கு கொண்டு இறையாசீர் பெற்றனர்.

### ▶ கிறிஸ்து அரசர் ஆலயம் – கிறிஸ்துராஜபுரம்

செப்டம்பர் 25 ஆம் நாள் மறைமாவட்ட இளைஞர் பொறுப்பாளர்கள் பங்கு இளையோர் இயக்கத்தைப் பார்வையிட்டு அவர்களுக்கு வேண்டிய அறிவுரைகள் பல வழங்கி சிறப்பித்தனர். 8 நோன்பும் சிறப்பாக அனுசரிக்கப்பட்டது

### ▶ புனித சவேரியார் ஆலயம் – வாறுதட்டு

செப்டம்பர் 10 ம் தேதி புனித. சவேரியார் ஆலயம் புதுப்பிக்கப்பட்டு அர்ச்சிக்கப்பட்டது. அன்னையின் குருசடியும் அர்ச்சிக்கப்பட்டது.

நமது மறைமாவட்ட ஆயர் மேதகு ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் ஆலயத்தை அர்ச்சித்து திருப்பலி நிறைவேற்றி அனைவருக்கும் இறையாசீர் வழங்கினார் இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அருட்தந்தை பிரிண்டோ குரியாஸ் அருட்சகோதரிகள் மற்றும் பங்கு மக்கள் அனைவரும் இணைந்து சிறப்பித்தனர்.

### புனித ஜார்ஜியார் திருத்தலம் – முன்சிறை

மாதாவின் பிறவித் திருநாளுக்கு ஆயத்தமாக 8 நோன்பு அனுசரிக்கப்பட்டது. ஆகஸ்ட் 31ம் தேதி முதல் செப்டம்பர் 8 ம் தேதி முடிய 9 நாட்கள் திருப்பலி செபமாலை மற்றும் மாதாவின் நவநாள் செபம் ஆகியவை மிகச் சிறப்பாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு நாளும் மாலை 6 மணிக்கு திருப்பலி நவநாள் ஜெபம் தொடர்ந்து ஜெபமாலை ஆடம்பரமாக ஆலயம் மற்றும் குருசடி சுற்றி பவனியாக நடைபெற்றது. அனைத்து மக்களும் ஜெபமாலை மற்றும் மெழுகுவர்த்தி ஏந்தி பவனியில் பங்கெடுத்தனர்.



இறுதியில் அருட்தந்தை அனில்ராஜ் அவர்களின் இறுதி ஆசீருடன் அனைவருக்கும் நேர்ச்சை உணவும் பரிமாறப்பட்டது. ஒவ்வொரு நாளும் இநநிகழ்சிகளை உறவியமக்கள், பக்த இயக்கங்கள், பங்குமக்கள் ஆகியோர் சிறப்பித்தனர். இவர்களால் காணிக்கைப் பவனியும் சிறப்பிக்கப்பட்டது. 8ம் தேதி மாலை திருப்பலி நவநாள் மற்றும் ஜெபமாலை பவனி ஆலயத்திலிருந்து புறப்பட்டு முன்சிறை

சந்திப்பு வழியாகச் சென்று புனித ஜார்ஜியார் குருசடியில் இறுதி ஆசீருடன் நிறைவு பெற்றது. அனைத்து இறைமக்களும் மிகுந்த பக்தியுடன் பங்கேற்று ஜெபித்து அன்னையின் அருள் பெற்று இல்லம் சென்றனர். 10ம் தேதி முன்சிறை (புதுக்கடை) புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்திலிருந்து பவனியாக வரும் அன்னையை வரவேற்று அன்னையின் அருளைப் பெற்றதோடு தங்கள் அன்பையும் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டனர். அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

**தகவல் சேகரிப்பு: திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா, திருமதி, ஷைலா | மெரின் சுஜித்**

# வரவிருக்கும் நிகழ்வுகள்

| | |
|---|---|
| ஜெபமாலை மாதம் துவக்கம் | - அக்டோபர் 01 |
| பொன்விழா கொண்டாட்டம், பிலாங்காலை | - அக்டோபர் 01 |
| Educare முகாம், கல்லுவிளை | - அக்டோபர் 02 - 05 |
| இறையழைத்தல் முகாம், படந்தாலுமூடு | - அக்டோபர் 03 - 04 |
| மறைக்கல்வி ஆசிரியர் கருத்தமர்வு, கல்லுவிளை | - அக்டோபர் 05 |
| அருட்தந்தையர் வருடாந்திர தியானம் | - அக்டோபர் 09 - 14 |
| மறைமாவட்ட துறைகளுக்கிடையேயான கூட்டம் | - அக்டோபர் 19 - 21 |
| மறைமாவட்ட ஜெபமாலை பவனி, பாலப்பள்ளம் முதல் சூசைபுரம் வரை | - அக்டோபர் 23 |
| மூன்று நாள் தியானம், சங்கமம் | - அக்டோபர் 27 - 30 |
| இணையவழி விவிலிய வினாடிவினா | - அக்டோபர் 30 |

# தென்காசி மறைத்தளம்

- **மேக்கரை ஆலய அருட்தந்தையர் தங்கும் இல்லம் அர்ச்சிப்பு.**

17-09-2022 அன்று மாலை 5.30 மணியளவில் அருட்தந்தையர் தங்கும் இல்லம் பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்களின் தலைமையில் அர்ச்சிக்கப்பட்டது. அனைத்து அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள், இறைமக்கள் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர். அருட்தந்தை தோமஸ் தக்கலை இதற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார்.

- **அருட்பணியாளர்களின் கூட்டம்.**

தென்காசி மறைத்தளத்தில் பணியாற்றும் அருட்பணியாளர்களின் கூடுகையானது செப்டம்பர் மாதம் 17-ஆம் தேதி மாலை 6.30 மணியளவில் மேக்கரை திருச்சிலுவை கன்னியர் இல்லத்தில் வைத்து ஆராதனையுடன் ஆரம்பமானது. தக்கலை மறைமாவட்ட ஆவண காப்பாளர் பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்கள் இக்கூடுகைக்கு தலைமை தாங்கினார். புதியதாக பொறுப்பேற்றிருக்கும் எம்.சி.பி.எஸ் துறவற சபையைச் சார்ந்த அருட்தந்தை ஜேம்ஸ் MCBS அவர்கள் மற்றும் புளியறை ஆலய பங்குதந்தையாக பொறுப்பேற்றிருக்கும் அருட்தந்தை டென்சி அவர்களுக்கும் சிறந்த முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து பக்த இயக்கங்களை பற்றி கலந்துரையாடப்பட்டது. புதிய பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



- **ஒருநாள் தியானம்**

தென்காசி மறைத்தளத்தின் வெள்ளி விழாவினை ஒட்டி அனைத்து பங்குகளிலும் ஹோம் மிஷன் நடத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து அனைத்து பங்குகளிலும் உள்ள மக்களை புளியறை ஆலயத்தில் ஒன்றிணைத்து ஒருநாள் தியானம் நடத்தப்பட்டது. அனைவரும் இதில் பங்கெடுத்து இறை ஆசிர் பெற்று சென்றனர்.

---

## இதர செய்திகள்

- நமது மறைமாவட்ட ஆயரின் தந்தை திரு.தோமஸ் (87) அவர்கள் 14.09.2022 அன்று நித்திய ஓய்விற்கு அழைக்கப்பட்டார். அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனிடம் வேண்டுவோம்.
- திருச்சூர் மேரிமாதா உயர் குருமடத்தில் பயின்று வரும் திருத்தொண்டர் அஜின், அருட்சகோதரர்கள் மோனிஷ், ஜோஸ்பின் மேத்யூ மற்றும் ஆகாஷ் ஆகியோரை 05 செப்டம்பர் 2022 அன்று மறைமாவட்ட ஆயர் அவர்கள் சந்தித்தார்கள்
- நமது மறைமாவட்டத்தில் அக்டோபர் 23 அன்று மறைபரப்பு ஞாயிறு கொண்டாடபடவுள்ளது.
- மரியாயின் சேனை சார்பாக நடைபெறவுள்ள ஜெபமாலை பவனி அக்டோபர் 23 ஞாயிற்றுக்கிழமை மதியம் 2 மணிக்கு பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்திலிருந்து, சூசைபுரம் புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயம் வரை நடைபெறவுள்ளது.
- திருத்தொண்டர் ஜார்ஜ்குட்டி படிப்பை முடித்து, தற்போது சங்னனாச்சேரி உயர்மறைமாவட்டத்தின் நாசரேத்தில் உள்ள புனித ஜெரோம்ஸ் தேவாலயத்தில் தனது இறைபணியை செய்து வருகிறார். அவர் அக்டோபர் 24 அன்று மீண்டும் நமது மறைமாவட்டத்திற்கு திரும்புவார்.
- அருட்தந்தை சுபின் ஸ்கரியா மரியாகிரியில் உள்ள மலங்கரை கத்தோலிக்க கல்லூரியில் MSW படிப்பில் சேர்ந்துள்ளார்.
- அருட்தந்தை பிரின்ஸ் மாலியில் அவர்கள் அக்டோபர் 28 அன்று அயர்லாந்து செல்லவிருக்கிறார். அருட்தந்தை றோபின் கூறுமுள்ளில் பணியாற்றிய இடத்தில் தனது இறைபணியை தொடர்வார்.

## MONTHLY AGENDA – OCTOBER 2022

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Sat | 10.00 am<br>03.20 pm | Cleaning camp at Utharamcode by St. Vincent de Paul Society members<br>Blessing of Cemetery and Golden Jubilee celebration at Pilankalai |
| 2 - 5 | Sun - Wed | | Educare camp at Kalluvilai |
| 3 - 4 | Mon - Tue | | Vocation discernment camp for boys & girls (IX –XII std) at Padanthalumoodu |
| 5 | Wed | 9:30 am | Catechesis teachers' Seminar at Kalluvilai |
| 6 | Thu | 10.00 am<br>03.00 pm | Forane level Kuzanthai Isso Iyakkam seminar at Pilankarai<br>Forane level Kuzanthai Isso Iyakkam seminar at Kaliyal |
| 7 | Fri | 9.30 am<br>9.30 am<br>10.00 am<br>02.00 pm | Marriage preparation course at Kalluvilai<br>One day convention at Vattakottai<br>Forane level Kuzanthai Isso Iyakkam seminar at Padanthalumoodu<br>Forane level Kuzanthai Isso Iyakkam seminar at Munchirai |
| 8 | Wed | 9.30 am<br>10.00 am<br>10.00 am<br>02.00 pm | Marriage preparation course at Kalluvilai<br>Commemmoration Holy Qurbana of Mar Mathew Kavukattu at Changanacherry Cathedral<br>Forane level Kuzanthai Isso Iyakkam seminar at Manjalumoodu<br>Forane level Kuzanthai Isso Iyakkam seminar at Kattathurai |
| 9 | Sun | 9.30 am<br>5.00 pm | Marriage preparation course at Kalluvilai-<br>Priests' Conference and Annual Retreat for Priests' |

| | | | |
|---|---|---|---|
| 10 - 14 | Mon - Fri | | Annual Retreat for Priests |
| 14 | Fri | 9.30 am<br>2.00 pm | CRI Retreat at Kalluvilai<br>Eparchial Day Celebration Committee meeting |
| 15 | Sat | 10.00 am<br>10.00 am<br>2.30 pm | Mental Health Day celebration at Kalluvilai<br>Eparchial convention committee meeting<br>Eparchial Assembly committee meeting |
| 16 | Sun | 1.30 pm<br>2.30 pm<br>6:00 pm | SMYM – Nithiravilai Forane Gathering at Nithiravilai<br>Forane Level Writing Competition by Catechism Department<br>SMYM Eaprchy of Thuckalay Mini Orchestra Launch |
| 18 | Tue | 2:30 pm | Diocesan and Congregations' English Medium Schools' Principals and correspondents Meeting at Sangamam |
| 19 - 21 | Wed - Fri | 09.30 am | Interdepartmental Meetings |
| 22 | Sat | 09.30 am<br>09.30 am | CML Platinum Jubilee committee meeting<br>One day convention at Sinai Retreat Center at Kalluvillai |
| 23 | Sun | 2:30 pm | Rosary Procession from Palappallam to Soosaipuram |
| 24 | Mon | 10.00 am<br>2:00 pm | Food Fest & Dance Fest at Kalluvilai<br>SMYM – Central Leaders' meeting |
| 27 - 30 | Thu - Sat | | Sinai Residential Retreat at Sangamam |
| 30 | Sun | <br><br>1.30 pm | Sunday School I Sem Examination<br>Online Mega Bible Quiz<br>SMYM – Manjalumoodu Forane Gathering |



ST. ALPHONSA COMMUNITY HALL BLESSING
ARIYUR, MADURAI, 18/09/2022



ONE DAY RETREAT, TENKASI MISSION,
PULIYARAI, 25/09/2022



SMYM, PADANTHALUMOODU YOUTH MEET, 18/09/2022



ST. MOTHER TERESA CHURCH
CONSECRATION, KALLUVILAI, 04/09/2022



BLESSING OF GROTTO AND RENOVATED
CHURCH, VARUTHATTU, 10.09.2022

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop’s House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570